[10th March 1960

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பேயே சொன்னேன். இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை.

SRI A. GOVINDASAMY : ஸார், இந்தத் திட்டத்தை நிறை வேற்றி உபயோகப்படாமல் கடலில் விழக்கூடிய காவேரித் தண்ணீரை வெள்ளாற்றிற்கு லிப்ட் இர்ரிகேஷன் மூலமாககொண்டு வருவதற்காக ஒரு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்ததே அதைப்பற்றிய தகவல் என்ன என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

Minimum Wages for Match Factory Workers

*266 *Q.*—SRI V. SUBBIAH : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவுக்கூலி வீதங்களை நிச்சயிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால், எப்போது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have issued a notification including the employment in match manufactory in the Schedule to the Minimum Wages Act, 1948. The minimum wages for this employment will be fixed before 2nd November 1960.

SRI V. SUBBIAH : ராஜ்யம் பூராவிலுமுள்ள தீப்பெட்டித் தொழிலாளர்களையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சக் கூலி என்பது ராஜ்யத்தில் இருக்கிற எல்லாத் தொழிலாளர்களுக்கும்தான்.

SRI K. SATTANATHA KARAYALAR : தீப்பெட்டித் தொழில் பல துறைகளாகப் பிரிவு பட்டிருக்கிறது. இது தீக்குச்சிகளை அடுக்குவது, தீப் பெட்டிகளை ஒட்டுவது என்ற பல துறைகளாகப் பிரிவு பட்டிருக்கிறது இந்த பல வேலைகளைப் பிரித்து குறைந்த பட்சக் கூலி எந்த எந்த முறையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது ? இந்த பல துறைகளைப் பொறுத்தும் சட்டத்தை எந்த முறையில் அமல் நடத்த சர்க்கார் உத்தேசிக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படலாம். அந்தக் கமிட்டியில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் முதலாளிகளின் பிரதிநிதி களும் இருப்பார்கள். அவர்கள் ரிப்போர்டு கொடுத்த பிறகு இது முடிவு செய்யப்படும்.

Houses for Harijans

* 267 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, கல்செப்பட்டி பிளாக், கோட்டைப்பட்டி, சில்நாய்க்கன் பட்டி, சாப்டூர் முதலிய ஊர்களில் ஹரிஜனங்களுக்கு கட்டியுள்ள 48 வீடுகள் சென்ற 3 வருடங்களாக முடிக்காமல் பாதியில் நிற்கும் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The contractors who were entrusted with the work failed to complete the houses and hence the Harijan colonies remained incomplete. Action is however, being taken to get them completed.